REGD. NO. M.:6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: வைகாசி 21உ திங்கள் (3—6—57) ★ ★ வெளியூர்: வைகாசி 22உ செவ்வாய் (4—6—57) [இதழ் 304

10 கோடி டன் வெடி மருந்துக்கு சமமான அணு சோதனை!

லண்டன், ஜூன் 1—

அணு ஆயுத வல்லரசுகளான பிரிட்டன், அமெரிக்கா, ருஷியா இதுவரை மொத்தம் 10 கோடி டன் வெடி மருந்துக்கு சமமான அணுகுண்டு சோதனை நடத்தியுள்ளனவாம்.

இதுவரை 10 பெரிய குண்டுகளும், 100-க்கு அதிகமான சிறு குண்டுகளும் வெடித்துள்ளனவாம்.

'சங்ககால அரசியல் நமக்கு நல்ல விழிப்புணர்ச்சி ஊட்டும்'

'புறத்தின் சிறப்பு நாகரீகம்; அகத்தின் சிறப்பு பண்பாடு'

'அரசன், மன்னன், இறைவன், காவலன், வேந்தன்-இவர்களெல்லாம் யார்?'

'கோனாட்சி, குடியாட்சி, தடியாட்சி-இவ்வாட்சிகளின் விளக்கமென்ன?'

பண்டைத் தமிழக அரசியல் பற்றி பொதுச்செயலாளர் பேருரை

"இதுவரை கடந்துவந்த பாதையை ஒரு குறிப்பிட்ட இடத்தில் நின்று திரும்பிப் பார்த்துவிட்டு, அதனை எண்ணிக்கொண்டு திரும்பவும் நீண்ட பயணத்தைத் தொடங்குவதுபோல, கடந்த காலத்தில் நமது நாடும், இனமும், மொழியும் இருந்துவந்துள்ள நிலைமைகளை எண்ணிப்பார்த்து அவற்றிலிருந்து படிப்பினைகள் பலவற்றைப் பெற்றுக்கொண்டு எதிர்காலத்திற்கு நம்மைத் தயார் படுத்திக்கொள்கிறோம்."

—என்று, 2—6—57 ஞாயிறு காலை சென்னை, கோகலேமண்டபத்தில் தி. மு. க. மாநில மாணவர் கிளை சார்பில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் 'பண்டைத் தமிழக அரசியல்' பற்றிப் பேசும் பொழுது, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

தொடர்ந்து பேசும்பொழுது அவர் குறிப்பிட்டதாவது:—

"மாணவர் கிளையின் சார்பில், இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாணவர்கள், அரசியலில் நேரடியாக ஈடுபடக்கூடாது என்றும், ஆனால் நன்றாக அரசியலை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும் என்றும் நாம் அடிக்கடி சொல்லிவந்திருக்கிறோம்.

இந்த நாட்டுக்குத் தேவை அறிவாளிகளே!

"இந்த நாடு மற்றநாடுகளைவிட அறிவுப் பஞ்சம் மிக்கதாக உள்ளது. நாட்டு மக்களில் 100-க்கு 13 பேர் மட்டுமே, தொடக்கப் பள்ளியில் பயில்கின்றனர். 100-க்கு நான்கு பேர் மட்டுமே, உயர்நிலைப் பள்ளிக் கல்வி பயில்கின்றனர். 100-க்கு ஒருவர் உயர்நிலைப் பள்ளியிலிருந்து கல்லூரிக்குச் செல்கின்றார். 10000-க்கு 13 பேர் கல்லூரிப் படிப்பை முடித்தவர்களாக இருக்கிறார்கள். இத்தகு நிலைமை போக்கப்படுவதற்காகவே—இந்தத் தலைமுறையில் வாழ்கிற மாணவர்கள் அதிகமாகப் படித்தவர்களாக இருக்கிறார்கள். நாட்டைப் பற்றி மிக்க பல அறிவாளிகளை இந்த நாடு எதிர்பார்க்கிறது.

நாட்டின் எதிர்காலம் மாணவர்கள் கையில்

"இங்கு குறிப்பிட்ட எந்தத் துறையிலும், நாட்டுக்குப் பயன்படத்தக்க ஆற்றலர்கள் உருவாக வழியில்லை. இப்பொழுது மாணவர்களாக உள்ளவர்களின் செயலிலியே இந்த நாட்டின் எதிர்காலம் இருக்கிறது.

நேரு பேச்சு!

மாணவர்கள்மீது இப்பொழுது எல்லோருக்கும் அக்கறை பிறந்திருக்கிறது. எல்லாக் கட்சிக்காரர்களும் மாணவர்கள் பற்றிப் பேச ஆரம்பித்திருக்கிறார்கள் சமீபத்தில் பண்டித நேரு குறிப்பிட்டார். 'காங்கிரஸ் மாணவர்கள் ஆதரவை இழந்துவிட்டது. அவர்களது ஆதரவை ஈர்க்கத்தக்க திட்டங்கள் காங்கிரசில் தீட்டப்படவேண்டும்' என்று.

கல்வித் துறை இயக்குநர் கருத்து!

"அதே நேரத்தில் இங்கே கல்வி இலாகா டைரக்டர் பேசுகிறார். 'அரசியல் கட்சிக்காரர்கள் மாணவர்களை இழுக்காதீர்கள்!' என்று.

"இயல்பாகவே அப்படிப் பேசப் பிரியப்படாத அவர், கல்வி இலாகா டைரக்டராகிவிட்ட காரணத்தாலேயே அவ்விதம் பேசுகிறார்.

நாம் சொன்னோம்; சொல்கிறோம்

"நாம் எப்பொழுதும் சொல்லுவதெல்லாம் மாணவர்கள் தங்களது படிப்பைப் பாதிக்கும் அளவிலுள்ள எந்த அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடக்கூடாது என்பதுதான்.

"கடந்த காலத்தில் நடைபெற்ற தேர்தலில் நாம் குறிப்பிடத்தக்க வெற்றிபெற்றிருக்கிறோம் என்பதில் ஐயமில்லை. நாம் பெற்றிருக்கிற இடங்கள் பதினைந்துதான் என்றாலும் நமக்குக் கிடைத்திருக்கும் ஓட்டுகள் சுமார் பதினேழு இலட்சம் ஆகும். இந்த ஓட்டுகள், காங்கிரஸ்காரர்களைப்போல முறையற்ற செயல்களால் பெற்றவை அல்ல. நாம் எந்தத் தொகுதியிலும் வெற்றி வெறிபிடித்து அலைந்ததில்லை. ஓட்டுகளைக் காசு கொடுத்துப் பெற முயன்றதில்லை. என்றாலும் குறிப்பிடத்தக்க வெற்றியை நாம் நிச்சயமாகப் பெற்றிருக்கிறோம்.

"சங்ககாலமான பண்டைத் தமிழக அரசியல் பற்றி நான் பேச வந்திருக்கிறேன்.

சங்ககால அரசியல் நல்லதொரு விழிப்புணர்ச்சி

"சங்ககாலத்து அரசியல் பற்றி இப்பொழுது பேசுவதற்கான காரணம், அதனை இப்பொழுதுள்ள அரசியலோடு ஓரளவு ஒப்பிட்டுப் பார்க்க முடியும் என்பதுதான்.

"கடந்தகால அரசியலைப் பற்றிப் பேசுவதன்மூலம், நாம் நல்லதொரு விழிப்புணர்ச்சியைப் பெற முடியும் என்று நான் நம்புகிறேன்.

'தம்பி'க்குச் சொல்லும் வரலாறு நம்மானம் காக்கும்!

"அனாதையான சிறுவன் ஒருவனை அணுகி, 'தம்பி! நீ ஏன் இப்படி இருக்கிறாய் தெரியுமா? வஞ்சகர்கள் உன் வாழ்வைப் பாழ்படுத்திவிட்டார்கள். இதோ செழுமையாகத் தெரியும் கழனிகள் உனது பாட்டனுக்குச் சொந்தமானவை. அதோ ஆழ்ந்து கிடக்கும் அந்த மாளிகையில்தான் அவர் கம்பீரமாக உலவினார். அங்கே இருந்து கொண்டுதான் அவர் தனது 'தர்பாரை' நடத்தினார். அவரோடு பழகி, அவரை வேண்டுமென்றே பல தவறான வழிகளில் ஈடுபட வைத்து அவரது சொத்துக்களைப் பிடுங்கிப் பங்கு வைத்துக்கொண்டார்கள் அந்தத் துரோகிகள். அதனால்தான் நீ அனாதையாக வேண்டியதாயிற்று' என்று பெரியவர் ஒருவர் சொல்லும்பொழுது, அவனது இரத்தம் கொதிப்பேறி ஆக்ரோஷத்துடன், 'நான் இப்படியே இருந்துவிடுவேன் என்று எண்ணிக்கொண்டுவிடாதீர்கள். நானும் நிச்சயமாக எனது பாட்டனாரைப்போல வாழ முயல்வேன். வெற்றி பெறுவேன்,' என்று அவன்—அனாதைச் சிறுவன் சொல்லமுடிகிறது.

வரலாறு காட்டும் வீரர்கள் பாதையில்......

"அதுபோலத்தான் 1914-ல் தன்னுடைய நாடு யூதர்களின் காலடியில் வீழ்ந்துகிடப்பதைக் கண்டு குமுறிய ஹிட்லர், 'ஜெர்மனியைக் காப்பேன், யூதர்களை விரட்டுவேன்,' என்று பணியாற்றினான். வெற்றி பெற்று ஆட்சிபீடமேறினான்.

"சாதாரண குடிமகனான ஆப்ரகாம் லிங்கன், அதுபோன்ற உணர்வு காரணமாகவே, அமெரிக்காவின் ஜனாதிபதியானான்.

உணர்வை வளர்க்கிறோம் நாம்

"இதுபோலவே, இன்று ஒரு காலத்தில் உலகம் வியக்க வாழ்ந்த தமிழகத்தைக் குறிப்பிட்டு, அது நல்ல ஊக்கத்தையும், ஆக்கத்தையும், ஆற்றலையும், அமைப்பையும் பெற்று விடுதலைப் புரிப் பயணத்தை மேற்கொள்ளும் உணர்வை நாம் வளர்த்து வருகிறோம்.

"நாடு நல்ல எதிர்காலத்தைப் பெறுவதற்கு, பெறுவதற்கான ஆற்றலை மக்கள் உருவாக்குவதற்கு நாட்டின் கடந்த கால எடுத்துக்காட்டுகள் நிச்சயமாகப் பயன்படும்.

தமிழகத்தில் அரசியல் முன்பே உண்டு

"அரசியல், உலகம் இந்த அளவு வளர்வதற்கு முன்னதாகவே, தமிழகத்தில் உண்டு. மற்றைய நாடுகளில் அரசியல் கருத்துக்கள் விதை தூவப்படுவதற்கு முன், இங்கே அது செம்மையாக வளர்ந்து பலன் தந்திருக்கிறது.

இடைக்கால அரசியல்...

"இன்றைய உலகில் போற்றத்தக்க அரசியல் முறையை அளித்துள்ளது கிரேக்க நாடாகும். அங்கே தான் பேரறிஞர்கள் பிளேட்டோவும், அரிஸ்டாட்டிலும் அரசியல் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள். அவற்றைப் பின்பற்றியே இடைக்காலத்தில் ஐரோப்பிய நாடுகளெங்கும் அத்தகு அரசியல் முறைகள் கையாளப்பட்டுவருகின்றன. உலகெங்கும் இப்பொழுது அமுலிலிருக்கும் அரசியல் முறைகளும் அவற்றைப் பின்பற்றி அமைக்கப்பட்டனவே.

"சந்திரகுப்த மௌரியர் காலத்தில், சாணக்கியனால் மாற்றுமுறையான அரசியல் முறை வகுக்கப்பட்டது. தமிழில் பலர் பலவிதமான வழிமுறைகளை அரசியலுக்கு வகுத்துச் சென்றிருக்கின்றனர்.

இயற்கை வாழ்க்கையோடு....

"தமிழன் அமைத்த அரசியல், மற்றவர்கள் போற்றத்தக்கதாக அமைந்திருந்தது. வியந்து பாராட்டத்தக்க முறையில் அவை அமுலாயின. இயற்கையோடு இணைந்த வாழ்க்கையைத் தமிழர்கள் மட்டுமே எல்லோருக்கும் முன்னதாக நடத்திக் காட்டினர்.

உயர்ந்த பண்பாடு — சிறந்த வாழ்க்கை

"அந்தக் காலத்தில் இருந்த நல்ல அரசு காரணமாக, நாகரிகமும், பண்பாடும் சிறந்து விளங்கின.

புறத்தின் சிறப்பு நாகரிகம் அகத்தின் சிறப்பு பண்பாடு

"நாகரிகம் என்பது, ஆங்கிலத்தில் Civilisation என்று அழைக்கப்படுவதாகும். பண்பாடு என்பது Culture என்று குறிப்பிடப்படுவதாகும். நாகரிகம் புறத்தின் சிறப்புகளைக் கொண்டிருப்பது; பண்பாடு அகத்தின் சிறப்பை எடுத்துக்காட்டுவது உள்ளப் பாங்கைக் காட்டுவது.

எடுத்துக்காட்டு......

"நல்ல உள்ளம் அவனுடையது; அறம் செய்வது அவனுடைய தொழில்; உண்மை வாழ்வு அவனுடையது—இதில் பண்பாட்டு உயர்வைக் காண்கிறோம்.

"மாட மாளிகைகள், கூடகோபுரங்கள், ஆடை ஆபரணங்கள் இதில் நாகரிகச் சிறப்பை அறிகிறோம்.

"இவை இரண்டும் அந்தக் காலத்தில், அந்த அரசியலில் நல்ல முறையில் அமைந்திருந்தன. நல்ல நிலையில் போற்றத்தக்க முறையில் இருந்து எடுத்துக் காட்டாய்த் திகழ்ந்தன.

தமிழக வரலாறு .....

"தமிழகத்தை வன்புகழ் மூவர் சிறப்புற ஆண்டிருக்கின்றனர். சேர, சோழ, பாண்டிய மன்னர்களான அம்மூவர் மட்டுமே, முடியுடை மூவேந்தர்களாக மதிக்கப்பட்டிருக்கின்றனர். அவர்கள் காலத்தில்தான், தமிழக அரசியல் உயர்நிலையை அடைந்திருந்தது.

அப்போது கையாளப்பட்ட அந்த அரசியல் முழுமையும் நல்ல முறையில் அமைந்ததே என்று நாம் கூறுவதற்கில்லை. அதுபோலவே முழுமையும் குறைபாடுகள் நிறைந்தவை என்றும் நாம் சொல்லிவிடுவதற்கில்லை. மொத்தத்தில் குறைபாடுகள் ஒரு சிலவற்றைக் கொண்ட, சிறந்த அரசியல் முறை இருந்திருக்கிறது என்பதில் கருத்து வேறுபாடே கிடையாது.

அரசன்-மன்னன்...இறைவன்-காவலன்-வேந்தன்..

"அரசு அல்லது அரசன் மக்கள் சமுதாயம் வளரவே இருப்பதாகக் கருதப்படுகிறது. மக்கள் வாழ, முறை பிறழாது அவர்களை ஆளும் கடமை மன்னனைச் சார்ந்தது.

"அரசு செலுத்துபவன் அரசன்; நிலை பெற்று நிற்பவன் மன்னன்; இறை அளிப்ப

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

சென்னை 3—6—57 திங்கள்

சட்டமும் செயலும்!

மனித சமுதாயத்திற்குத் தவிர்க்கமுடியாத தேவைகளில் உணவும் ஒன்று என்பதை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாததாகும். இந்தியா சுதந்திரம் பெற்று, ஆட்சிபீடத்திலே பத்து ஆண்டு காலமாக இருந்தும், முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கென்று பல கோடி ரூபாய் செலவிட்ட பின்னரும் மக்களுக்குத் தேவைப்படும் உணவுப் பொருள்களை அதிகமாக விநியோகிக்க வழி செய்யாவிடினும், சாதாரணமாகத் தேவைப்படும் அளவிற்குக்கூட இன்றைய அரசாங்கத்தினால் தரமுடியவில்லை என்பதும், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படை நோக்கமாக மேற்கொண்ட உணவு உற்பத்தியும் பலனளிக்கவில்லை என்பதும், இப்போது மத்திய அரசாங்கம் நீண்ட குழப்பத்திற்குப் பிறகு உணவுப் பொருள்களின் விலைகள் உயர்ந்து வருவதைத் தடுக்கவும், பதுக்கலைத் தவிர்க்கவும் செய்துள்ள சட்டமே போதிய சான்றாகும்.

இந்தப் புதிய சட்டத்தின் நோக்கம் உணவுத் தானியப் பதுக்கலைத் தடுப்பதும், வியாபாரிகள் கொள்ளை இலாபம் அடிப்பதைத் தடுப்பதுமாகும்.

தானிய இருப்பை ஒரு குறிப்பிட்ட விலை விகிதத்தில் கொள்முதல் செய்து, அதன் அடிப்படையில் விலைகளை நிர்ணயிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் தலையீட்டுக்கு அஞ்சி தானியத்தைப் பதுக்கிவைத்துள்ள வியாபாரிகள் தங்கள் சரக்குகளை விற்பனைக்குக் கொண்டுவரக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

நிலைமையும், நோக்கமும் எதுவாக இருப்பினும், மொத்தத்தில் இப்போதாகிலும் அரசாங்கம் உணவு விஷயத்தில் அக்கறை காட்டியிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

அதோடு, உணவுப் பொருளின் விலைகள் விஷம்போல் உயர்ந்துகொண்டே வருகிறதே — மக்களின் வாழ்வில் வேதனை வளர்ந்துள்ளதே — வாங்கும் சக்தியை இழந்து வரும் ஏழைகளும், நடுத்தர வகுப்பினரும் அல்லல் படுகின்றனரே என்று எடுத்துரைத்த போதெல்லாம் உண்மையைக் கண்டறியாது, அலட்சியமும் அக்கறையின்மையையும் காட்டி வந்ததுடன், 'விளைச்சல் நன்றாகயிருக்கிறது; தேவையான தானியம் அரசாங்க உணவுக் கிடங்குகளில் கையிருப்பில் உள்ளது; எத்தகைய கவலைக்கும் உணவுப் பிரச்சினை இடம் தரவில்லை; என்று பேசியவர்கள், தானியங்களின் விலை அதிகரித்திருப்பதை உணர முன்வந்து உடனடியான நடவடிக்கைகள் எடுக்க முன்வந்துள்ளதுள்ளது பாராட்டத்தக்கது.

இந்த விலை உயர்வைத் தடுத்து, மலிவான விலையில் உணவுப் பொருள்கள் மக்களுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதில் அக்கறை மேற்கொண்டுள்ளதின் எடுத்துக்காட்டாகும் இந்த சட்டம்.

இந்தச் சட்டத்தின் மூலம் கொள்முதல் செய்யும் உணவுப் பொருள்களையும்,வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள்களையும், தற்போது கையிருப்பிலிருக்கும் உணவுப் பொருள்களையும் நல்ல முறையில்—திறமையான நிர்வாகத்தின் மூலம் மக்களுக்கு விநியோகிப்பதற்குத் 'திட்டமிடப்பட்டால்தான் தற்போது உயர்ந்துள்ள விலை நிச்சயமாகக் குறையக்கூடும். பல தவறுகளுக்கும் குறைபாடுகளுக்கும் இடமளித்து வந்துள்ள 'நியாய விலைக் கடை'களை மீண்டும் நல்லமுறையில்—மக்களுக்கு உண்மையில் பயன்படக்கூடியவாறு இயங்கச் செய்யவேண்டியதும் மிகவும் அவசியமாகும்.

இதனால், மனித சமுதாயத்தின் எதிரிகளாக விளங்கும் பதுக்கல் பேர்வழிகள் தானாகவே உணவுப் பொருள்களை நேர்வழியிலும், நியாயமான விலையிலும் விற்க முன்வரக்கூடும்.

ஆனால், இன்றுவரை இயற்றப்பட்டுள்ள எத்தனையோ சட்டங்கள் சரிவர அமுல் செய்யாததின் விளைவாக, எதிர்பார்த்த நல்லதோர் சமுதாயமும், நல்ல நிலைமையும் ஏற்படவில்லை என்பதை மறந்துவிடக்கூடாது. பல சட்டங்கள் இயற்றப்பட்டதுடன், கடமை தீர்ந்துவிட்டது என்று கருதுவதைவிட, உண்மையில், இயற்றப்பட்ட சட்டத்தைக்கொண்டு எந்த நோக்கத்திற்காக அச்சட்டம் இயற்றப்பட்டதோ அந்த நோக்கத்தை அடைய வேண்டும் என்ற உறுதிப்பாடுடன், இடையிலே ஏற்படும் சிக்கல்களை நீக்கியும், இன்னல்களைத் தவிர்த்தும், சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டியவர்களைத் தயவுதாட்சண்யமின்றிக் கடுமையாக எந்த சலுகையும் காட்டாது தண்டிப்பதே மக்களுக்கு அரசாங்கம் செய்யக்கூடிய கடமையாகும்.

எனவே, இந்தச் சட்டத்தை இனி எவ்வாறு அரசாங்கம் அமல் நடத்துமோ அதை பொறுத்துத்தான் மக்களுக்கு நன்மையும் தீமையும் ஏற்படும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

உணவுப் பிரச்சினை இந்த நாட்டு மக்களைப் பெரிதும் பாதித்துவந்துள்ளது. பட்டினி, பஞ்சம், பற்றுக்குறை என்ற பயங்கர அறிகுறிகளும் இங்கு அடிக்கடி தோன்றிவந்துள்ளன. எனவே, மேலும் இந்த விஷயத்தில் அரசாங்கம் உறுதியுடனும், தெளிவுடனும், நேர்மையுடனும் நற்பணியாற்ற வேண்டியது மிகமிக அவசியமானதும், அவசரமானதுமாகும்.

இதை மறந்து, சட்டம் இயற்றியும் பயனளிக்காத நிலையைக் கண்டு முறையிடும்போது, 'உணவுப் பொருள்கள் வெளிநாடுகளுக்கு இரகசியமாகக் கடத்திச் செல்லப்பட்டது; அதனால்தான் இந்த நெருக்கடி ஏற்பட்டது' என்ற விபரீத விளக்கம் தரவேண்டிய நிலையை ஏற்படுத்திக்கொள்ளாமல், விலைகள் இறங்கவும், மக்கள் தங்கள் தேவைக்கு ஏற்ற அளவு மலிவான விலையில் உணவுப் பொருள்களை வாங்கவும், புதியதோர் சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும் என்று கூறுவதோடு, இயற்றப்பட்டுள்ள சட்டம் நல்ல பயன் தரும் அளவிற்கு அமுல் நடத்தப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறோம்.

பழிவாங்கும் படலம் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 1—

தென்னாட்டிலிருந்து ஏராளமான அளவில் கைத்தறிக் 'கைலி'கள் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்துள்ளது. குறிப்பாக வட, தென்னாற்காடு மாவட்டங்களில் தயாரிக்கப்படும் கைத்தறி கைலிகளுக்கு இலங்கையில் ஆதரவு அதிகம் பெருகிவந்துள்ளது.

தற்போது இலங்கையை ஆண்டுவரும் பண்டா அரசாங்கம் தமிழர்களுக்குப் பெரும் தீங்குகளை நாளுக்கு நாள் இழைத்து வருகிறது.

இலங்கையில் வாழும் தமிழர்களை கொடுமைக்குள்ளாக்குவதோடு, தென்னாட்டில் உள்ள தமிழர்களையும் பாதிக்கும் நடவடிக்கையில் ஈடுபடத் துவங்கிவிட்டது.

தென்னாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் கைலிகளுக்குத் தடை விதிப்பதென அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

இலங்கையில் உற்பத்தி செய்ய முயற்சித்துவரும் கைலித் தொழிலைப் பாதுகாக்க இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதென காரணம் கூறப்பட்டிருக்கிறது.

அச்சடித்த சேலைகள்

ஏற்றுமதி செய்ய அனுமதி

பம்பாய், ஜூன் 1—

உள்நாட்டு உபயோகத்துக்கென கையால் அச்சடிக்கப்பட்ட நூல் சேலைகளை 1957 டிசம்பர் முடியும் வரை ஏற்றுமதி செய்ய தாராள அனுமதி வழங்கப்படும் என்று ஏற்றுமதி அதிகாரி அறிவித்துள்ளார்.

விற்பனைவரியின் மூலம் ரூ.10 கோடிவருமானம்

ஐதராபாத், ஜூன் 1—

நடைமுறை நிதி ஆண்டில் ஆந்திர மாநிலத்தில் மொத்தம் ரூ. 10 கோடிக்கு அதிகமாக விற்பனை வரியின் மூலம் வருமானம் கிடைத்துள்ளது என்று நிதி அமைச்சர் கோபால ரெட்டியார் தெரிவித்துள்ளார்.

சென்ற ஆண்டில் மொத்தம் ரூ. 7 கோடி மட்டுமே வருமானம் கிடைத்ததாம்.

ரஷ்யா தரும் உதவி

நெய்வேலிக்கும் பயன்படுமாம்?

மக்கள் சபையில் தகவல்

புதுடில்லி, மே 30—

அரசாங்கம் இந்தியாவுக்கு தந்துள்ள 50 கோடி ரூபிள் (ரஷ்ய நாணயம்) கடன் உதவியைக் கொண்டு ஒரு கனரக இயந்திரக் கட்டிடத் திட்டம், ஒரு சுரங்க இயந்திரத் திட்டம், கோர்பா நிலக்கரி சுரங்க அபிவிருத்தி, ஒரு மூக்குக் கண்ணாடித் தொழிற்சாலை, சிந்திரி இரசாயனத் தொழிற்சாலையை அபிவிருத்தி செய்தல், தென்னாட்டில் நெய்வேலி மின்சாரத் திட்டம் ஆகியவைகளை நிறைவேற்ற இந்திய அரசாங்கம் முடிவு முடிவு செய்துள்ளது என்று தொழில் அமைச்சர் ஷா, மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

'பஞ்சசீலம்' பயன்படுமா?

காந்தியார் கூறியதை மறந்துவிட்டதேன்?

இராணுவத்திற்கு வெட்டிச் செலவு செய்வதா?

சென்னை, ஜூன் 1—

"பஞ்சசீலக் கொள்கையுடனும், காந்தியார் கூறிய நல்லுரையைப் பின்பற்றியும் ஆட்சி செய்வோர், தெரிந்தோ தெரியாமலோ இராணுவத்திற்கு அதிக செலவு செய்வது அவசியமற்றதாகும்,"

என்று, நாகராஜசர்மா என்பவர், தனது கருத்தை 'இந்து' இதழுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

"2-வது, 3-வது திட்டத்திற்குப் போதிய நிதி வசதி ஏற்படுத்தவே இரயில்வே, அஞ்சல் ஆகியவைகளின் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது என்று மத்திய நிதி அமைச்சர் காரணம் காட்டுகிறார். இந்தியாவின் இராணுவச் செலவைக் குறைத்துத் திட்டத்திற்கான பணத்தைத் தேடலாம்.

"இந்தியா 'பஞ்சசீல'க் கொள்கையில் உறுதிகொண்டுள்ளது. எந்த அந்நிய நாட்டையும் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கமும் கொண்டிருக்கவில்லை. உலகத்தின் எந்த ஆக்கிரமிப்பு நாடுகளுடனும் கூட்டு சேர்ந்திருக்கவில்லை; எனவே, பெரிய இராணுவத்தை வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இந்தியாவுக்குத் தேவையில்லை.

"மற்றொரு கோணத்தில் இருந்து பிரச்சினையை நோக்கும்போது, எவ்வளவுதான் இந்தியா பஞ்சசீலக் கொள்கையில் நம்பிக்கைகொண்டிருந்தாலும், ஆக்கிரமிப்பு நாடுகளின் தாக்குதலைத் தவிர்ப்பதற்கில்லை. அந்த நேரத்தில் இந்தியா, காந்தியார் கூறியபடி நடப்பதைத் தவிர வேறு வழியில்லை.

"போர்க்காலத்தில் பிரிட்டனில் வாழும் மக்களுக்கு காந்தியார் கூறிய யோசனைப்படி இந்திய மக்களும், ஆக்கிரமிக்க வருபவர்களை வரவேற்று, தங்கள் வீடுகளை எதிரிகளுக்குத் தாராளமாக திறந்துவிடவேண்டியதுதான்!

"எனவே, திட்டத்தைக் காட்டி ஏழைகள் அடிக்கடி பயன்படுத்திவரும் இரயில், அஞ்சல் முதலியவைகளின் கட்டணத்தை உயர்த்தும் வகையில் வரி போடுவது கூடாது."

முதல்திட்டத்திற்குபின் இந்தியாவின் நிலைமை

பர்மாவிலிருந்து 5 இலட்சம் டன் அரிசி இறக்குமதியாயிற்றும்

புதுடில்லி, மே 31—

சுமார் ரூ. 2,000 கோடி செலவில், நாட்டின் உணவு உற்பத்தியை அடிப்படையாகக்கொண்டு நிறைவேற்றப்பட்ட முதல் ஐந்தாண்டுத் திட்டம் படுதோல்வியடைந்துவிட்டது என்பதற்கு, வெளிநாடுகளிலிருந்து அவ்வப்போது இந்தியா, உணவு இறக்குமதி செயவதே போதிய சான்றாகும்.

"1957 மே திங்கள் வரை இந்தியா பர்மாவிலிருந்து 5 இலட்சம் டன் அரிசி இறக்குமதி செய்திருக்கிறது" என்று, மத்திய அரசாங்க உணவு உதவி அமைச்சர் கிருஷ்ணப்பா மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

நீண்டாமைச் சட்டத்தின்கீழ்

தொடர்ந்த வழக்குகள்

மக்கள் சபையில் தகவல்

"1955-ம் வருடத்திய தீண்டாமை (குற்றங்கள்) பற்றிய சட்டத்தின்கீழ் மாநில சர்க்கார்கள் 1956 மார்ச் 31-ந் தேதி வரையில் 257 வழக்குகள் தொடர்ந்தனர்; அந்தச் சட்டத்தின்படி தீண்டாமை நடைமுறை ஒரு குற்றமாக ஆக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு மாநில சர்க்கார்களைச் சேர்ந்ததாகையால், இது சர்பந்தமாக சமீபத்திய தகவல்கள் மத்திய சர்க்காருக்குக் கிடைக்கவில்லை" என்று மத்திய அமைச்சர் பி. என். தத்தார் மக்கள் சபையில் கூறியுள்ளார்.

எவ்வளவு தெரியுமா?

புதுடில்லி, ஜூன் 1—

குளிர்சாதன இரயில் பெட்டி ஒன்றுக்குச் சுமார் ரூ. 2,69,000 செலவாகிறதாம்!

மூன்றாவது வகுப்பு குளிர்சாதன பெட்டி ஒன்றுக்கு சுமார் ரூ. 2,70,000 செலவு பிடிக்கிறதாம்!

குளிர்சாதன சாப்பாடு பெட்டி ஒன்றுக்குச் சுமார் 2,25,000 செலவாகிறதாம்!

சாமான்கள், பிரேக், மின்சார உற்பத்திப் பெட்டிகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 3,00,000 செலவு பிடிக்கிறதாம்!

இலாபத் தொகைகள் பற்றிய தகவல்கள்

சர்க்காரிடம் இல்லையாம்!

புதுடில்லி, ஜூன் 1—

இந்தியாவில் தொழில் நடத்திவருகிற வெளிநாட்டுக் கம்பெனிகள் 1956 — 57-ம் ஆண்டில் மொத்தம் ரூ. 27,44,00,000 வெளிநாடுகளுக்கு அனுப்பியிருக்கின்றன என்றும், கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்தியாவிலுள்ள வெளிநாட்டுக் கம்பெனிகள் சம்பாதித்துள்ள இலாபத் தொகைகள் பற்றிய தகவல் சர்க்காரிடம் இல்லையென்றும், மத்திய நிதி மந்திரி, மக்கள் சபையில் கூறியுள்ளார்.

கார்வாரில் மற்றொரு காகித உற்பத்திச்சாலை!

பெங்களூர், மே 31—

கார்வார் மாவட்டத்தில் தற்போது தாஸ்டலி என்ற பகுதியில் ஒரு காகித உற்பத்திச்சாலை இருக்கிறது.

இதே மாவட்டத்தில் எல்லாபுரத்தில் மற்றொரு காகித உற்பத்திச்சாலையை துவங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது.

மைசூர் மாநில திட்ட அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

கோவையில் வானொலி உற்பத்தித் தொழிற்சாலை

கோவை, ஜூன் 1—

தமிழ் நாட்டின் தொழில் மேதை ஜி. டி. நாயுடு அவர்கள் ஆரம்பித்துள்ள வானொலி உற்பத்தித் தொழிற்சாலையை, ஆந்திர மாநிலத்தின் பிரதம நீதிபதி சுப்பாராவ் திறந்துவைத்துள்ளார்.

இந்தத் தொழிற்சாலையில் மலிவான விலையில் வானொலி பெட்டிகள் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளதாம்.

ஒரு வானொலிப் பெட்டி ரூ. 100-க்குக் கிடைக்குமாம். ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ள 5,000 பெட்டிகள் விற்பனைக்கு தயாராக உள்ளதாம். ஒரு சில பாகங்கள் தவிர மற்றவை எல்லாம் இங்கே தயாரிக்கப்பட்டனவாம்.

தெரிந்து கொள்ளுங்கள்!

சென்னை, ஜூன் 1—

சென்னை நகரில் அரசாங்கம் நடத்திவரும் பஸ் போக்குவரத்து மூலம் ஏப்ரல் திங்களில் ரூ. 13,06,600 கிடைத்துள்ளதென்றும், மொத்தம் 315 பஸ்கள் ஓடியதென்றும் 1,11,00,000 பேர் பிரயாண வசதி பெற்றனரென்றும், மொத்தம் 450 பஸ்கள் உள்ளனவென்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

வடநாட்டில் உருவாகிவரும் - மூன்று உருக்குத் தொழிற்சாலைகள்

நடைமுறை பற்றிய தகவல்கள்

புதுடில்லி, சூன் 1—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டமிடப்பட்டுள்ள மூன்று உருக்குத் தொழிற்சாலைகளும் வடநாட்டிலுள்ள ரூர்கேலா, பிலாய், துர்காபூர் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இந்த மூன்று மாபெரும் திட்டங்கள் பற்றியும்; நடைமுறைகள் பற்றியும் மேலும் சில தகவல்கள் கிடைத்துள்ளன :—

திட்டமிட்டப்படியே இந்தியாவின் மூன்று உருக்குத் தொழிற்சாலைகளிலும் எல்லா வேலைகளும் சிறப்பாக நடைபெற்று வருகிறதாம்.

கிரப், டிமாக்னும் இரண்டு ஜெர்மன் நிறுவனங்களின் உதவியுடன் இந்திய சர்க்கார் இத் தொழிற்சாலையை நிறுவி வருகிறது; இதற்குத் தேவையான சாமான்களை 21 ஜெர்மன் கம்பெனிகள் அனுப்பிவைக்கும்.

ஆண்டு முழுமையிலும் தண்ணீர் வசதிக்காக 'சங்க்' என்ற ஆற்றின் குறுக்கே அணைகட்டப்பட்டு வருகிறதாம்.

ரூர்கேலாவிலிருந்து தூமாரோ வரை இரயில் பாதை அமைக்கப்பட்டு வருகிறதாம்.

குடியிருப்புக்காக 882 வீடுகள் கட்டி முடித்துள்ளனராம்; மேலும் 1,483 வீடுகள் கட்டப்பட்டு வருகிறதாம்.

பிலாய்

இந்தத் தொழிற்சாலை சோவியத் ரஷ்யாவுடன் கூட்டாக இந்திய அரசு ஏற்படுத்தத் திட்டமிட்டதாகும்.

இதற்குத் தேவைப்படும் பொருள்களை ரஷ்யாவிடம் வாங்குவதற்கு இந்தியா ஒப்பந்தம் செய்துள்ளது. இதுவரை 17 கப்பல்களில் 23,000 டன் சாமான்கள் ரஷ்யாவிலிருந்து வந்துள்ளதாம்.

பிலாயிலிருந்து 'தாலி இராசகரா' வரையில் இரயில் பாதை அமைப்பு 1957 மத்தியில் முடிவாக அமைக்கப்பட்டு விடுமாம்.

துர்காபூர்

இந்தத் தொழிற்சாலை பிரிட்டனுடைய கூட்டுறவுடன் ஏற்படுத்தப் படுவதாகும். இதற்குத் தேவையான சாமான்கள் அனைத்தும் வாங்குவதற்கு ஒரே நிறுவனத்திடம் ஏற்பாடு செய்யப்பட்டதாம். ஒப்பந்தம் முடிந்தவுடன் வேலைத் துவங்கி விட்டதாம்.

இதற்குத் தேவைப்படும் இரும்புக்கனிப்பொருள் ஒரிசா மாநிலத்திலுள்ள போலானி பகுதியிலிருந்து எடுத்துக் கொள்ளப்படுகிறதாம்.

குடியிருப்புக்காக 56 வீடுகள் கட்டப்பட்டுவிட்ட தென்றும், 400 வீடுகள் கட்டப்பட்டு வருகிறதென்றும் கூறப்பட்டிருக்கிறது.

மற்ற ஏற்பாடுகள்

இந்த மூன்று தொழிற்சாலைகளுக்கும் தேவைப்படும் நிலக்கரியை ஒதுக்கியுள்ளனராம்.

இந்த மூன்று தொழிற்சாலைகளுக்கும் 120 பொறியியல் நிபுணர்களும், 1,200 தகுதி வாய்ந்த பொறியியலினரும், 10,000 முழுப் பயிற்சி பெறாத ஊழியர்களும் தேவைப்படுகிறார்களாம்.

கடந்த எப்ரலில் தேர்ந்தெடுக்கப்பட்ட 269 பொறியியலினர் போக 541 பொறியியலினர் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டு வருகிறார்களாம். ரஷ்யாவில் 107 இந்திய பொறியியலினருக்கு பயிற்சியளிக்கப்பட்டு வருகிறதாம்.

மேலும் 1957-58ல், பொறியியலினரையும், 587 தேர்ச்சி பெற்ற ஊழியர்களையும் அந்நாட்டிற்கு அனுப்பிவைத்துப் போதிப் பயிற்சி அளிப்பதென திட்டமிடப்பட்டுள்ளதாம். மேற்கு ஜெர்மனியில் 68 பொறியியலினர் தற்போது பயிற்சி பெற்று வருகிறாராம்.

அமெரிக்காவிலுள்ள 'போர்டு' நிறுவனம், 900 இந்தியர்களுக்குத் தன் நாட்டிலுள்ள எஃகுத் தொழிற்சாலையில் பயிற்சி யளிக்க ஏற்பாடு செய்துள்ளதாம்.

கொழும்புத் திட்டத்தின்கீழ் 300 இந்தியர்களுக்குப் பிரிட்டனில் பயிற்சி யளிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாம்.

குறைந்த வருமானப் பிரிவுப் பெண்கள்

பயிற்சி பெற்று சம்பாதிக்க டில்லியின் 'மாபெரும்' உதவி!

சென்னையின் திட்டத்திற்குக் கிடைக்கும் மானிய இலட்சணம்

புதுடில்லி, மே 31—

குறைந்த வருமானமுள்ள குடும்பத்தினரின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு ஆட்சியிருப்போர் ஒன்று கண்டுபிடித்து விட்டனர். இந்தக் குடும்பங்களை சேர்ந்த பெண்களுக்கு வேலைத் தேடித்தர உற்பத்திப் பயிற்சித் நிலையங்களை ஏற்படுத்த மத்திய அரசு முன்வந்துள்ளதாம்.

சென்னையில் தோல் சாமான்கள் தயாரிப்புக்காக இரண்டு நிலையங்களும், காகித பைகள், உறைகள் தயாரிக்க இரண்டு நிலையங்களும் இந்திய மாதர் சங்கம் ஏற்படுத்துமாம்.

மேலும், படுக்கை கட்டும் உறை (ஹோல்டால்) வர்ண சாக்குகள் முதலியன தயாரிப்பதற்கான பாரத சேவா சங்கம் இரண்டு நிலையங்களை ஏற்படுத்துமாம்.

தோல் தயாரிப்பு நிலையத்திற்கு ரூ. 2,850 மானியமாகவும், ரூ. 8,850 கடனாகவும், காகிதப் பொருள் தயாரிப்புக்கு ரூ. 94,950 கடனாக மாதர் நல்வாழ்வு சங்கத்திற்கும்; படுக்கை கட்டும் உறை தயாரிப்பு, வர்ண சாக்கு தயாரிப்புக்கு மானியமாக ரூ. 1,74,465 மானியமாகவும் ரூ. 1,25 115 கடனாகவும், பாரத் சேவா சங்கத்திற்கும் தர மத்திய அரசாங்கம் முன்வந்துள்ளதாம்.

திரண்டெழுந்த மக்கள் அணிவகுப்பு

புது வரிகளுக்கு எதிராக கண்டனக் குரலெழுப்பினர்

தி. மு. கழக தலைமை நிலையத்தின் அறிக்கைக்கிணங்க, தமிழகமெங்கணும், புது வரி விதிப்புக் கண்டன நாள் 26—5—57 அன்று வெகு சிறப்பாக நடைபெற்றிருக்கின்றது.

அந்த மகத்தான கண்டன நிகழ்ச்சிகளின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—

கொழப்பலூர் :

26—5—57 மாலை 6 மணிக்கு, தோழர் எம். முத்துசாமி தலைமையில் பெருமாள் கோயில் சதுக்கத்திலிருந்து கண்டன ஊர்வலம் புறப்பட்டு, மீண்டும் அங்கு வந்து கூட்டம் நடைபெற்றது. தோழர் ச. மு. அண்ணாமலை தலைமையில் தோழர் எம். முத்துசாமி புதுவரிகளை கண்டித்துப் பேசினார்.

மானூர் :

26—5—57 மாலை 4 மணியளவில் மானூர் தோழர் தி. மு. க. பித்தன் தலைமையில் கண்டன ஊர்வலம் கழகக் கட்டிடத்திலிருந்து புறப்பட்டு, ஊரின் முக்கிய வீதிகள் வழியாக 'வரி எதிர்ப்புக் கண்டனக் குரலை' எழுப்பிய வண்ணம் காளியம்மன் கோயில் திடலுக்கு, வந்தடைந்தது; அங்கு தோழர் தி. மு. க. பித்தன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் சு. முத்துக்குமார், சி. பிச்சைமுத்து, எஸ். எம். துரைசாமி ஆகியோர் பேசினர். கண்டனத் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

மேட்டுப்பாளையம் :

26—5—57 இரவு 7 மணியளவில் நீலகிரி மேட்டுப்பாளையம் நகர தி. மு. கழகச் சார்பில் காந்தியார் திடலில் நடைபெற்ற புதுவரி கண்டனக் கூட்டத்தில் தோழர் கி. செகநாதன் தலைமை தாங்கினார். தோழர்கள் மே. எ. கோதண்டராமன், கோவை—செழியன், கண்ணதாசன் ஆகியோர் புதுவரிகளைக் கண்டித்துப் பேசினர். 4 தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சின்னதாராபுரம் :

26—5—57 சின்னதாராபுரம், மதியாக்கூடலூர், தொக்குபட்டி, அணைப்பாளையம், அரங்கபாளையம் முதலிய கிளைக் கழகங்களின் சார்பில் புதுவரிப் கண்டன ஊர்வலம் மாலை 6 மணிக்கு சின்னதாராபுரத்தில் நடைபெற்றது. ஊர்வலத்திற்குப் பின் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் பலர் பேசினர். புதுவரிகளை எதிர்த்து கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சேலூர் :

29—5—57 காலை 10 மணிக்கு இவ்வூர் அழகிரி மன்றச் சார்பில் மன்றப் பணிமனையில் தோழர் எ. கே. குமாரவேலன் தலைமையில் புது வரிகள் கண்டனக் கூட்டம் நடைபெற்றது; அதுசமயம் வரி உயர்வைக் கண்டித்து தோழர்கள் மு. சோமசுந்தரம், எஸ். ஜி. கோபாலன், வி. பரசுராமன், பி. ஆர். செயராமன், எஸ். எ. கைலாசன் ஆகியோர் பேசியபின் கண்டனத் தீர்மானமும் நிறைவேறியது.

ஆண்டிமடம் :

26—5—57-ல், தோழர் எ. டி. வி. செயராம(செட்டியார்) தலைமையில், புது வரிவிதிப்புக் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் புலவர்-கூ. ஆறுமுகம் அ. நடராசன் ஆகியோர் பேசினர். மேற்படி கூட்டத்தில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருத்தங்கல் :

26—5—57ல், இவ்வூர் தி. மு. கழகச் சார்பில், புதிய வரிகளை எதிர்த்து தோழர்; எஸ். வி. செண்பகமூர்த்தி தலைமையில் கண்டன ஊர்வலமும், பொதுக் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர். பின் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஒரத்தநாடு :

26—5—57-ல், வரி எதிர்ப்புக் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. தோழர் என். எழில்நிலவன் தலைமையில், தோழர்கள் சா. கோவிந்தன், எஸ். வி. லிங்கம் முதலியோர் பேசினர்.

விருதுநகர் :

26—5—57 மாலை 4 மணிக்கு தோழர் கே. சுப்பிரமணியம் தலைமையில் நாடார் பரிபாலன சங்கத்திலிருந்து சைக்கிள்கள் முன் செல்ல ஓர் ஊர்வலம் புறப்பட்டு நகர முக்கிய வீதிகள் வழியாக வந்து கழக பணிமனையில் முடிவுற்றது. வரி விதிப்பை எதிர்த்து கண்டன தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஒக்கரை :

26—5—57 மாலை 6½ மணிக்கு தோழர் சி. பெரியசாமி தலைமையில் புது வரிகள் கண்டன ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலத்தில் கிராமப் பொதுமக்களும் பெரியவர்களும் கலந்துகொண்டனர். ஊர்வலம் மாரியம்மன் கோவிலிலிருந்து புறப்பட்டு கழக கட்டிடத்திற்கு வந்து முடிவுற்றது.

திண்டிவனம் :

26—5—57ல் திண்டிவனம் நகர மன்ற உறுப்பினர் தோழர் எஸ். நடராசன் அவர்கள் தலைமையில் ஊர்வலமும், காந்தி திடலில் வழக்கறிஞர் டி. எ. எஸ். பாலன் தலைமையில் தோழர்கள் ப. இராமானுசம், கோட்டையன், எஸ். பக்கிரிசாமி, ஆ. தங்கவேலு ஆகியோர் புது வரியை எதிர்த்து பேசினர்.

வத்தலகுண்டு :

26—5—57 மாலை 5 மணிக்கு, ஆற்றுப்பாலத்திலிருந்து தோழர் ஆர். பி. துரைச்சாமி தலைமையில் மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு, வரிக் கொடுமை வாசகங்கள் தாங்கிய அட்டைகளைத் தாங்கி பல தெருக்கள் வழியாகச் சென்று ரேடியோ மைதானம் வந்து முடிவுற்றது. தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

சின்னங்குப்பம் :

26-5-57 இரவு 7-30 மணிக்கு, சின்னங்குப்பம் தி. மு. கழகத்தின் சார்பில் புதுவரிகள் கண்டனக் கூட்டம் தோழர் சி. மா. சண்முகம் தலைமையில் நடைபெற்றது. புதுவரிகளைக் கண்டித்து 5 - தீர்மானங்கள் நிறைவேறின.

விழுப்புரம் :

26—5—57 மாலை 6 மணிக்கு விழுப்புரம் புகைவண்டி நிலையத்திலிருந்து எ. பக்தவத்சலம் (நகர் மன்ற உறுப்பினர்) அவர்கள் தலைமையில் புதிய வரி விதிப்பு கண்டன ஊர்வலம், விழுப்புரம் தி. மு. கழகச் சார்பில் நகர முக்கிய வீதிகளின் வழியாக சென்று சண்முகம் பூங்காவை அடைந்தது. புதிய வரி விதிப்பு கண்டன தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கோவை 30-வது வட்டம்:

26—5—57 காலை 9 மணிக்கு கோவை 30-வது வட்டார செல்வபுரத்தில் திரு. வணங்காமுடி முன்னிலையில், ஆதிசிவம் தலைமையில் புதிய வரி எதிர்ப்பு ஊர்வலம் நடத்தப்பட்டது; வரிகளைக் கண்டிக்கும் ஒலிகளை ஏராளமான பொது பொதுமக்கள் முழக்கமிட்டார்கள். பின் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் வணங்காமுடி தலைமையில் வரிகளைக் கண்டித்து தோழர் மலையாண்டி பேசினார்.

அலவாக்கோட்டை :

26—5—57 மாலை 7 மணிக்கு, அலவாக்கோட்டை, நாமனூர், கருத்தன்பட்டி கழகங்கள் சார்பில், இவ்வூரில் புதிய வரி விதிப்புக் கண்டன நாள் ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடைபெற்றது; கூட்டத்திற்கு தோழர் கண. நா. சுப்பிரமணியன் தலைமை வகித்தார். தோழர்கள் இராம. சுந்தரம், சுப. கருப்பையா பழ. சொ. பழனியப்பன், இராமசந்திரன், உலகநாதன் ஆகியோர் பேசிய பின் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கர்நாடகத்தில் கண்டனக் குரல்

26—5—57 மாலை 4 மணிக்கு, பெங்களூர் சில்லால் பார்க்கிலிருந்து சிராமபுரம் தி. மு. கழகச் சார்பில் புதுவரிகள் கண்டன ஊர்வலம் புறப்பட்டு நகர முக்கிய வீதிகளின் வழியாக கண்டன ஒலிகளை எழுப்பிக்கொண்டுவந்து சிராமபுரம் வ. உ. சி. திடலை அடைந்தது. மாலை 6 மணிக்கு, தோழர் மு. அண்ணியப்பன் தலைமையில் தோழர்கள் ஏ. டி. பிரான்சிஸ், வே. இராமலிங்கம், ஏ.வி.பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ. ஆகியோர் புதுவரிகளைக் கண்டித்து சொற்பொழிவாற்றினர்.

ஆடம்பரத்திற்காக வரிப் பணத்தை பாழாக்கும் 'பரம்பரை நோய்'

அமைச்சர்கள் முதல் அதிகாரிகள் வரையில் பரவியுள்ளதாம்!

இதுபற்றி ஆராய விசாரணைக் குழு தேவையாம்!

திறமையற்றவர்களையும் தகுதியில்லாதவர்களைக்கொண்டு இன்றைய ஆட்சி இயங்கி வருகிறதாம். மக்களை வாட்டிவதைத்து வசூலிக்கப்படும் வரிப் பணம் பல துறைகளில் பாழாக்கப்படுவதை நாமும், நாட்டின் நன்மையைக் கருதும் நல்லோரும் பலமுறை எடுத்துக்காட்டி வந்திருக்கிறோம்.

'இன்றைய அரசாங்கமும், அதன் தொடர்புகொண்ட நிறுவனங்களும் செய்துள்ள செலவை ஆராய்ந்து, பணம் வீணாக்கப்பட்டிருப்பதைக் கண்டறிய ஒரு விசாரணைக் குழுவை உடனடியாக நியமிக்க வேண்டும்' என்று, டில்லி ஆங்கில தினசரி ஒன்றில் தோழர் சுதிர் என்பார் வற்புறுத்தியுள்ளார்.

மக்களின் நல்லெண்ணத்தையும், ஒத்துழைப்பையும் அரசாங்கம் பெற விரும்பினால் இதுவே இன்றியமையாதது என்றும், படாடோபத்திலும் அர்த்தமற்ற ஆடம்பரத்திலும் பணம் வீணடிக்கப்படும் வியாதி, அமைச்சர்கள் முதல் சாதாரண அதிகாரிகள் வரையில் பரவியுள்ளது என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் நாடு முழுவதும் சுற்றிப் பார்த்தவராம். அரசாங்க இலாகாக்களில் எங்குமே சிக்கனமும், திறமையும், கண்டிப்பும் காணப்படவில்லை என்றும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் சிக்கனத்தைக் கடைபிடித்து கண்டிப்பாக வாழவேண்டும் என்று கூறுவதற்கு முன்னர் அரசாங்கம், அதற்குரிய வழிகாட்டியாக—எடுத்துக் காட்டாக இருக்கவேண்டுமானால், இத்தகைய விசாரணைக் குழுவை அமைப்பது அவசியமாகும் என்றும் அவர் மத்திய நிதி அமைச்சரை கேட்டுக்கொண்டுள்ளார்.

ஊழலைப் பற்றிய உண்மைகள்!

வெளிப்படுவது எப்போது

புதுடில்லி, மே 30—

"அமைச்சர்கள் விலக்கப்படும் போதும், அவர்கள் இராஜிநாமா செய்த பின்னருமே ஊழலைப் பற்றிய உண்மைகள் வெளிப்படுகின்றன — டாக்டர் முகர்ஜி, டாக்டர் ஜான்மத்தாய், இராஜாஜி ஆகியோர் வெளிப்படுத்தியுள்ள உண்மைகள் இதை மெய்ப்பிக்கின்றன" என்று, வரவு - செலவுத் திட்ட விவாதத்தின்போது, மக்கள் சபையில் கிருபளானி குறிப்பிட்டுள்ளார்.

இரா. நெடுஞ்செழியன் பேருரை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வன் இறைவன்; பாதுகாப்பவன் காவலன்; முடி அணிவதால் வேந்தன்—இப்படி தமிழில் அரசுக்கு வழங்கும் பெயர்களுக்கு முறையான பொருளுண்டு.

கோனாட்சி-குடியாட்சி—தடியாட்சி!

"ஆட்சி மூன்று வகைப்படும். அவை கோனாட்சி, குடியாட்சி, தடியாட்சி ஆகியவையாகும்.

"மன்னன் கையிலேயே அதிகாரம் முழுமையும் ஒப்படைக்கப் பட்டிருப்பது கோனாட்சி முறையாகும்.

"மக்களுக்கே முழு அதிகாரமும் வழங்கப்பட்டிருப்பது குடியாட்சி. இது பிளேட்டோ, அரிஸ்டாட்டில் ஆகியோரால் கண்டு பிடிக்கப்பட்டு உருவாக்கப் பட்டது.

"இந்த இரண்டு ஆட்சிக்கும் இடைப்பட்ட சர்வாதிகார ஆட்சிக்கு, தடியாட்சி என்று பெயர்.

"தமிழகத்தில் கோனாட்சிதான் இருந்தது என்ற போதிலும், அது மக்கள் ஆட்சியாகவே அமைந்திருந்தது.

அன்றைய ஆட்சி

"குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன், அடிதழீ நிற்கும் உலகு' என்ற குறள் வழி ஆட்சி அப்போது நடந்தது.

"தமிழக ஆட்சி முறையை சோழ மன்னர்களான ராஜ ராஜன், ராஜேந்திரன், குலோத்துங்கன் ஆகியோர் காலத்து கல்வெட்டுகளும், செப்பேடுகளும் நமக்குத் தெளிவாக விளக்குகின்றன.

"நாடு அக்காலத்தில் வளநாடு, கோட்டம், கூற்றம், தனியூர், பற்றுதல்லது குறைப்பற்று என்ற விதத்தில் பிரிக்கப்பட்டுச் செம்மையுற ஆட்சி செய்யப் பட்டது.

பண்டைய தேர்தல் முறை!

இக்காலத்தில் வழங்கிவரும் தேர்தல் முறையும் அக்காலத்தில் இருந்திருக்கிறது. குடஓலை மூலமாக, அப்போது உரிய தேர்தல்கள் நடைபெற்றிருக்கின்றன.

"தலைவன் வேற்றூர் செல்கிறான். தலைவி அவனுடைய பிரிவை எண்ணி வாடுகிறாள். தோழி அவளுக்கு ஆறுதல் கூறுகிறாள். தலைவன் செல்லும் பாதையில் பாலையாக இருக்கும். அங்கே பிணங்கள் வீழ்ந்துகிடக்கும். அவற்றின் குடல்களை கழுகுகள் வயிற்றிலிருந்து கொத்தி வெளியே எடுக்கும். பொதுமக்கள் கூடும் அறங்கூறு அவையில், வாக்கு ஓலைகளை குடத்திலிருந்து சான்றோர் எடுப்பதுபோல அது தோற்றமளிக்கும் இவற்றைப் பார்த்துவிட்டு தலைவன் திரும்பி வந்துவிடுவான் என்று தோழி தலைவிக்குக் கூறுவதாக ஒரு அகப் பொருள்பாடல் இருக்கிறது. இந்தப் பாடல் காட்டும் உவமையிலிருந்து அந்தக் காலத்திலேயே குடஓலைத் தேர்தல்முறை அமுலிலிருந்தது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

பண்டைய நிருவாகம்...

அப்போது ஊர் ஊருக்குப் பல சபைகள் நிறுவப்பட்டு அவை மூலம் ஆட்சி நடத்தப்பட்டது. வழக்கு கவனிக்க அட்டை வாரியம், புஞ்சை கவனிக்க தோட்ட வாரியம், நஞ்சை மேற்பார்வைக்கு கழனி வாரியம், ஏரி, குளத்திற்கு ஏரி வாரியம், அணைக்கட்டைப் பாதுகாக்க கலிங்கு வாரியம், நாணயச் செலாவணிக்கு பொன் வாரியம், கணக்குத் தணிக்கைக்கு கணக்கு வாரியம், சேமிப்புக்கு பஞ்சவாரியம், பாதை அமைப்புக்கு தடவழி வாரியம், பகுதிகள் நிர்வாகத்திற்கு குடும்பு வாரியம் என்ற பலவாரியங்கள் (சபைகள்) தேர்தல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சி செம்மையுற நடந்தது என்று உத்திர மேரூர் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

தேர்தலில் நிற்க தகுதிகள் வேண்டும்!

"அப்போது தேர்தலில் நிற்பதற்குப் பல தகுதிகள் வரையறுக்கப்பட்டிருந்தன.

"வரி கட்டி வாழும் காணி நில உடைமையாளர், சொந்த மனைவி கட்டி வீட்டோடு குடியிருப்போர், சிறந்த கல்வி நலம் பெற்றோர், காரியம் நிறைவேற்றும் ஆற்றலுடையோர், அறநெறியில் பொருளீட்டி செம்மை வாழ்வு வாழ்வோர், 35-லிருந்து 75 வரை வயது உடையோர், எந்த வாரியத்திலும் மூன்று ஆண்டு தொடர்ந்து அங்கம் வகிக்காதோர் ஆகியோர் மட்டுமே தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப் பட்டனர்.

தகுதியற்றவர்கள்....

"வாரியக் கணக்குக் காட்டாதவர்கள், கொலை, காமம், குடி முதலிய ஐம்பெரும் குற்றம் செய்தவர்கள், ஊர்க் குற்றவாளிகள் (கேடி) பட்டியலில் இடம் பெற்றிருப்பவர்கள், பிறர் பொருளை மோசடி செய்து கவர்ந்தோர், கள்ளக் கையெழுத்திட்டோர், குற்றம் செய்தது காரணமாகக் கழுதை மீது ஏற்றப்பட்டோர், கையூட்டு (இலஞ்சம்) பெற்றோர், சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டுத் தள்ளிவைக்கப்பட்டோர், முறை கெட்ட மணம் செய்துகொண்டோர், கெட்ட துணிச்சலை (ரௌடித்தனத்தை) மேற்கொண்டோர், உண்ணத்தகாததை உண்டோர், இவர்களின் நெருங்கிய உறவினர், தீமைக்களோடு உறவுகொண்டோர் எனப்படும் பதினமூன்று தகுதியுடைய எவரும் தேர்தலில் போட்டியிடும் உரிமையற்றவர்களாக மதிக்கப்பட்டார்கள்.

போர் முறை......

"போர் செய்வதற்கும் அன்றைய அரசியலில் முறை வகுக்கப் பட்டிருந்தது.

"இரவில் போர் நடைபெற வொட்டாமல் செய்யப்பட்டது. ஊருக்குள் போர் நடைபெறாமல் தடுக்கப்பட்டது; போர் செய்யப் போகிறார்கள் என்பதற்கு மாலை அடையாளமாக இடப்பட்டு வெற்றிப் பெற்றோர் வாகை மாலை சூடினர். அப்போது அரசனை நேரடியாகப் படை நடத்திச் செல்வான்.

சென்றனர். அதற்கு வாஞ்சி எனும் மாலை பயன்படுத்தப்பட்டது. வெற்றி பெற்றோர் வாகை மாலை சூடினர். அப்போது அரசனே நேரடியாகப் படை நடத்திச் செல்வான்.

அரசியற் பண்பு

"இவை தவிர சான்றோரை மதிக்கும் பண்பு அக்கால அரசிடம் நிரம்பி இருந்தது.

"தமிழுக்கும், தமிழ்ப் புலவருக்கும் உயர்ந்த கௌரவமளிக்கப் பட்டன.

"இத்தகைய உயர்ந்த அரசு காரணமாக வாணிபம் வளர்ந்தது. கலைசிறந்தது. வீரம் அமைந்தது. தனிப் பண்பு ஒளிவிட்டது உலகில் தனக்கென ஒரு இடத்தைப் பெற்றுத் தமிழகம் உலவ முடிந்தது.

தொல்லைகள் இல்லாவிட்டால், புகழ் குன்றில் திகழும் தமிழகம்!

"இடையில் பல தொல்லைகள் ஏற்பட்டுத் தமிழகம் நிலைகுலைக்கு வராமலிருந்திருந்தால் அன்றைய தமிழக அரசியல் மேலும் செம்மைப்படுத்தப்பட்டு உலகின் மகுடமாகத் திகழும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

"இந்த நமது பண்டையச் சிறப்புகளை எண்ணியபடி, எதிர்கால நமது வாழ்வை, அரசியலை நாம் வகுத்துக்கொண்டால் அவை மீண்டும் உலகில் சிறந்து விளங்கும் என்று நாம் துணிந்து நம்பலாம்."

நிகழ்ச்சி

சென்னை, ஜூன் 2—

2—6—57 காலை 10 மணி அளவில் தி. மு. க. மாநில மாணவர் கழக சார்பில் சென்னை கோகலே மண்டபத்தில் சேலம் வழக்கு நிதிக்கான சிறப்புக் கூட்டம் சட்டக் கல்லூரி மாணவர் வேலூர் தோழர் நி. நாராயணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் தமது உரையில் நடைபெற்ற தேர்தலில் காங்கிரசார் கையாண்ட நியாயமற்ற செயல்கள்பற்றி முறையற்ற காரியங்களைப் பற்றியும் எடுத்துப் பேசினர்.

அடுத்து பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'பண்டைத் தமிழக அரசியல்' என்பதுபற்றி நீண்டநேரம் உரையாற்றினர்.

நன்றி நவில கூட்டம் இனிது முடிந்தது.

சுயாட்சியுள்ள தமிழரசு வேண்டும்

இலங்கை பெடரல் கட்சி நிபந்தனை

கொழும்பு, ஜூன் 1—

'நாங்கள் விரும்புவது அதிகாரவினியோகமும், சுயாட்சியுள்ள தமிழரசும், பிரதேச உரிமைகளைப் பெறுவதுமாகும், என்று இலங்கை பெடரல் கட்சித் தலைவர் செல்வநாயகம் தெரிவித்துள்ளார்.

ஆகஸ்டு திங்களில் அறப்போர் நடத்த இலங்கையில் ஏற்பாடாகி வருவது தெரிந்ததே.

இலங்கையில் தமிழர்கள் அவர்களது விருப்பத்திற்கு விரோதமாக ஆளப்படுகிறார்கள் அவர்களுக்கு ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்பதை உலகத்திற்கு எடுத்து காட்டுவதும் இந்த அறப்போரின் ஒரு இலட்சியம் ஆகும்.

என். எஸ். இளங்கோ

28—5—57 அன்று சென்னையிலிருந்து புறப்பட்டுச் சென்ற தோழர் இளங்கோ அவர்கள் ஜுரத்தினால் பீடிக்கப்பட்டு மருத்துவ வசதி பெற்று வருகிறார்கள். காய்ச்சல் 103, 104 டிகிரி அளவுக்கு நிற்கிறது. எனவே, அவர் இந்த வாரத்தில் ஒப்புதல் தந்திருந்த சேலம், ஜலகண்டபுரம், தொ. சேடர்பாளையம், வத்தலக்குண்டு, திண்டுக்கல் கூட்டங்கள் ரத்து செய்யப்படுகின்றன.

சிங்கப்பூரில் 'மஞ்சள் மழை!'

நீர்வளிக்குண்டு சோதனையே காரணமா?

சிங்கப்பூரில் மஞ்சள் மழை பெய்துள்ளதாம்! சமீபத்தில் பிரிட்டன் கிறிஸ்துமஸ் தீவில் நடத்திய நீர்வளிக்குண்டு சோதனையே இதற்குக் காரணமென மக்கள் கருதுகின்றனராம்!

மழைத் துளிகள் விழுந்த இடங்களில் கறை படிந்துள்ளதாம். வீட்டுக்கூரைகள் மீதும், கார்களின் மேற்பகுதிகளிலும் அத்தகைய கறைகள் காணப்படுகிறதாம்!

அமைச்சர்களுக்கு தரப்படும் சம்பளம்

அதிகமில்லை என்கிறார் பண்டிதர்

புதுடில்லி, ஜூன் 2—

"அமைச்சர்களுக்கு தரப்படும் சம்பளம் அதிகம் என்று கருத முடியாது"

என்று, பண்டித நேரு அ. இ. கா. கமிட்டியின் கூட்டத்தில் உத்திரப்பிரதேசத்தை சேர்ந்த பஞரசி கொண்டுவந்த தீர்மானத்தின் மீது பேசியுள்ளார்.

காங்கிரஸ்காரர்கள் ரூ.1000க்கு மேல் சம்பளம் பெறக்கூடாது என்பதே அந்தத் தீர்மானத்தின் அடிப்படை நோக்கமாகும்.

மாதம் ரூ. 500-க்கு மேல் ஊதியம் பெறக்கூடாது என்று காரச்சி தீர்மானம் குறிப்பிட்டுள்ளது தெரிந்ததே.

கூட்டுறவு சர்க்கரை ஆலைகள்

புதுடில்லி, ஜூன் 1—

கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் ஏற்படுத்த இதுவரை 38 'லைசென்சுகள்' வழங்கப்பட்டுள்ளனவாம்.

அவை பம்பாயில் 16, பஞ்சாபில் 5, ஆந்திரத்தில் 5, உத்திரப் பிரதேசத்தில் 3, சென்னையில் 3, மைசூரில் 3, பீகாரில் 1, அசாமில் 1, ஒரிசாவில் 1 வீதம் அமையும்.

இத்தகைய கூட்டுறவு ஆலைகள் ஏற்படுத்த மொத்தம் 279·1 இலட்சம் ரூபாய் மத்திய அரசாங்கம் அனுமதித்துள்ளதாம்.

சென்னைக்கு இதில் 25 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது.

பல தொழில்களுக்கு நியாய ஊதிய நிறுவனங்கள்

புதுடில்லி, ஜூன் 2—

துணி, சர்க்கரை தொழில்களுக்கு ஏற்கனவே செய்துள்ளதுபோல, பல்வேறு தொழில்களுக்கும் நியாய ஊதிய நிறுவனங்கள் அமைக்க மத்திய அரசாங்கம் யோசித்து வருகிறது என்று நந்தா தெரிவித்துள்ளார்.

ஆடம்பரப் பொருள்களுக்கு ஒரே மாதிரியான விற்பனை வரி

ஐதராபாத், ஜூன் 1—

எல்லா மாநிலங்களிலும் ஆடம்பரப் பொருள்கள் மீது ஒரே மாதிரியான விற்பனை வரி விதிக்கப்பட வேண்டும் என்று மாநிலங்களுக்கு மத்திய அரசாங்கம் யோசனை கூறியுள்ளதாம்.

நைத் தொழில்களுக்கு உதவி

சென்னை, ஜூன் 2—

சென்னை நைத் தொழில் அரசாங்க உதவி திட்டத்தின்கீழ் நைத் தொழில் நிறுவனம் 3,70,000 ரூபாய் வரை வழங்கியுள்ளதாம் என்றும், தீப்பெட்டி உற்பத்தி, காகிதம் வெட்டும் யந்திரங்கள், மோட்டார் ரேடியேட்டர்கள் போன்ற பல நைத் தொழில்களுக்கு உதவியாக இந்த தொகை பகிர்ந்து தரப்பட்டுள்ளதாம்.

மூன்றாண்டு பட்டப்படிப்பு

புதுடில்லி, ஜூன் 2—

மூன்றாண்டுகளில் பட்டப் படிப்பு சம்பந்தமாக மதிப்பீடு குழு செய்துள்ள சிபாரிசுகளை இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

மாநில அரசுகளின் பல்கலைக்கழக மான்யக் குழு ஆகியவை களைக் கலந்துகொண்டு இத்திட்டத்தை 25 கோடி ரூபாய் செலவில் அமல் செய்யுமாம்.

கடலூர் நகர தி. மு. கழக நிதிக்குழு உறுப்பினர்கட்கு:

5—6—57 இரவு 9 மணிக்கு, புதுப்பாளையம் - க்யூ போட்டோ ஸ்டுடியோவில் நகர தி. மு. கழக நிதிக் குழு கூட்டம் நடைபெறும்; அதுபோது அண்மையில் நடந்த பாராட்டு விழாவின் கணக்கு பரிசீலனைக்கு வரும். உறுப்பினர்கள் வருகை தரக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தொழில்துறை சிப்பந்திகளுக்கு வீட்டு வசதியாம்

குடி புகாமலிருப்பதற்குக் காரணம் என்ன?

புதுடில்லி, ஜூன் 2—

"தொழில் துறை சிப்பந்திகளுக்காக இதுவரையில் மொத்தம் சுமார் 55,000 வீடுகள் கட்டப் பட்டுள்ளன; அதில் 44,000க்கும் அதிகமான வீடுகளில் குடிவந்து விட்டார்கள் அல்லது ஒதுக்கப் பட்டுவருகின்றன. சுமார் 10,000 வீடுகள், உட்புற வெளிப்புற வேலைகள் பூர்த்தியானவுடன் சிப்பந்திகளுக்கு ஒதுக்கித் தரப்படும். உதவியின் பலனும் ஏற்படுகிற குறைந்த அளவு வாடகை யைக்கூடக் கொடுக்கத் தொழிலாளர்கள் மனமில்லாதிருப்பதாலும், இதர சில்லறைக் காரணங்களினாலும் சுமார் 700 வீடுகள் குடிவராமல் இருக்கின்றன" என்று மத்திய அமைச்சர் கே. சி. ரெட்டி மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

கழகக் கூட்டங்கள்

★

சென்னை—தாம்பரம்:

பெரியார் நகர் (மே. தாம்பரம் மார்க்கெட்டில்)

5—6—57 மாலை 5-30 மணிக்கு

தி. மு. கழக 3-வது ஆண்டு விழா

தலைவர்: மூர்த்தி

பேசுபவர்: முனு-ஆதி

(காலை 8 மணி அளவில் கொடியேற்று விழாவும், பகல் 12 மணிக்கு ஏழைகளுக்கு உணவு அளித்தலும் நடைபெறும்.)

★

தொ. சேடர்பாளையம்:

(சேலம் மாவட்டம்)

கே. வி. கே. சாமி திடலில்

5—6—57 மாலை 5 மணிக்கு

தி. மு. கழகத் துவக்க விழா

பேசுபவர்: ஜி பி சோமசுந்தரம்

(மாலை 4 மணியளவில், முருகன் குழுவினரின் சிலம்ப விளையாட்டுடன் ஊர்வலம் நடைபெறும்.)

க. அன்பழகன் சுற்றுப்பயணம்

ஜூன் 3:	சின்னமனூர்
4:	தேவகோட்டை
5:	அரிமழம்
6:	சிங்கம்புணரி
7:	மதுரை (திருமணம்)
8:	மேட்டுப்பாளையம் (சோவை)
9:	கோவை (நகர்) காலை-திருமணம் மாலை-பொதுக்கூட்டம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.